# கல்வி விரிவாக்கமும், அதிகரித்து வரும் வேலையின்மையும்

21-ஆம் நூற்றாண்டின் முதல் கால்பகுதியில் இந்தியாவில் இரண்டு இணையான போக்குகள் காணப்படுகின்றன. அவை: உயர் நிலை கல்வியின் விரைவான விரிவாக்கமும் மற்றும் பட்டதாரிகள் மத்தியில் நிலவும் அதிகரிக்கும் வேலையின்மையும். இந்தக் கட்டுரை, கல்வி விரிவாக்கத்திற்கும், வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் இடையிலான கட்டமைப்புச் சமநிலையின்மை, நகர்ப்புற மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு இடையே அதிகரித்து வரும் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் இந்தியாவின் மிகப்பெரிய நம்பிக்கையாகவும், அதே சமயம் மிகக் கடுமையான சவால்களில் ஒன்றாகவும் உருவெடுத்துள்ள (Gen Z) தலைமுறை ஆகியவற்றை ஆராய்கிறது.

**உயர்கல்வி மற்றும் அதிகரித்து வரும் வேலையின்மை**

சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆரம்ப ஆண்டுகளில், நான்கு மட்டுமே இருந்த இந்தியத் தொழில்நுட்பக் கழகங்களின் (Indian Institutes of Technology, IITs) எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. மண்டலப் பொறியியல் கல்லூரிகள் (Regional Engineering Colleges), தேசியத் தொழில்நுட்பக் கழகங்களாக (National Institutes of Technology, NITs) தரம் உயர்த்தப்பட்டன; மருத்துவக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கை அதிகரிக்கப்பட்டது; அத்துடன் மருந்தியல் (pharmacy), செவிலியர் பணி, துணை மருத்துவ அறிவியல் மற்றும், முதியோர் பராமரிப்பு போன்ற தொழில்முறைப் படிப்புகளும் பெருமளவில் விரிவடைந்தன. 25 ஆண்டுகளில் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், மருத்துவ அறிவியல் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளை உள்ளடக்கிய உயர்கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. பல்வேறு தொழில்முறை கல்வித் துறைகளில் தனியார் துறை நுழைவை எளிதாக்குவதன் மூலம், அத்துறையில் தனியார் துறையின் அதிகப்படியான பங்களிப்பையும் அரசு ஊக்குவித்தது.

வேலைவாய்ப்பு குறித்த தரவுகள், ஒரு முக்கிய விஷயத்தை வெளிப்படுத்துகின்றன. நூற்றாண்டின் முதல் ஐந்து ஆண்டுகளில் வேலைவாய்ப்பு விகிதங்கள் ஓரளவுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் இருந்தபோதிலும், அதன்பிறகு அவை சரிவைச் சந்தித்தன. இருப்பினும், MBBS பட்டதாரிகளிடையே இந்தச் சரிவு சற்று குறைவாகவே இருந்தது. அரசு மற்றும் ஊராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சுகாதார மையங்கள் மூலம், கிராமப்புறங்களில் மருத்துவ சேவைகளை விரிவுபடுத்த அரசு மேற்கொண்ட முயற்சிகள் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

உயர்கல்வி விரிவடைந்த போதிலும், பட்டதாரிகளிடையே வேலையின்மை அதிகரித்துள்ளது. உற்பத்தித் துறையின் குறைந்தபட்ச ஆள்சேர்ப்புத் திறனைக் காட்டிலும், சிவில், மெக்கானிக்கல் மற்றும் எலெக்ட்ரிக்கல் பொறியியல் போன்ற பாரம்பரியப் பொறியியல் துறைகளில், பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். சமீப காலங்களில், போட்டி நுழைவுத் தேர்வுகளின் நம்பகத்தன்மை மற்றும் செயல்முறை தொடர்பான சிக்கல்கள், கல்வித் தகுதிகளுக்கும் வேலைவாய்ப்புகளுக்கும் இடையிலான இடைவெளியை மேலும் அதிகரித்துள்ளன.

கல்லூரிகளில் சேர விரும்பும் மேல்நிலைக் கல்வித் தகுதி பெற்ற இளைஞர்களின் தயார் நிலையில், நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. கல்வி வாய்ப்புகள் தொடர்பான பிற குறியீடுகளுடன் ஒப்பிடுகையில், பட்டதாரிகள் வேலையின்மை விவகாரத்தில் இந்த ஒட்டுமொத்த இடைவெளி குறைவாகவே (சுமார் 7 சதவிகித புள்ளிகள்) உள்ளது.

IITs, NITs மற்றும் முன்னணி மருத்துவக் கல்லூரிகள் போன்ற உயர்தர நிறுவனங்களில் சேரும் வாய்ப்பு நகர்ப்புற, நடுத்தர மற்றும் உயர் வர்க்கக் குடும்பத்தினருக்குத் தொடர்ந்து அதிகமாக உள்ளது. அதே வேளையில், பல கிராமப்புற இளைஞர்கள் போதிய நிதி வசதியற்ற பல்கலைக்கழகங்களையோ அல்லது முறைசாரா வேலைவாய்ப்புகளையோ சார்ந்திருக்க வேண்டியுள்ளது. இவ்வாறு அதிகரித்து வரும் ஏற்றத்தாழ்வு தற்போதைய, GEN Z இளம் தலைமுறை கல்விச் சூழலின் ஒரு முக்கிய அடையாளமாகத் திகழ்கிறது.

முறைசாரா துறையில் (informal sector) வேலைவாய்ப்பு வளர்ச்சியை ஆராய்வது மற்றொரு தெளிவான சித்திரத்தை அளிக்கிறது. நகர்ப்புறத் தொழிலாளர் சக்தியில் முறைசாரா வேலைவாய்ப்பின் பங்கு 70%-க்கும் குறைவாக உள்ள நிலையில், கிராமப்புறத் தொழிலாளர் சக்தியில் இது சுமார் 85%-ஆக உள்ளது.

எனவே, நகர்ப்புறத் துறையை விட கிராமப்புற முறைசாராத் துறையே கணிசமாக அதிக அளவிலான வேலைவாய்ப்பைக் கொண்டுள்ளது. 2025-ஆம் ஆண்டிலும் கூட, இந்தியத் தொழிலாளர்களில் ஏறக்குறைய ஐவரில் நால்வர் முறைசாரா வேலைவாய்ப்பிலேயே நீடித்தனர். முறையான கல்வியின் விரிவாக்கத்திற்கும், முறையான மற்றும் உற்பத்தித் திறன் மிக்க வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பொருளாதாரத்தின் திறனுக்கும் இடையே தொடர்ந்து நிலவும் முரண்பாட்டை இது சுட்டிக் காட்டுகிறது.

ஜென் Z: (இந்திய இளைஞர்களின் இரு முகங்கள் ஜென் Z) என்ற சொல் பரவலாக 1990-களின் பிற்பகுதிக்கும், 2000-களின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் (வயது18-30) பிறந்த தலைமுறையைக் குறிக்கிறது. இது மொத்த மக்கள் தொகையில் சுமார் 30% ஆகும். இப்போது இந்தத் தலைமுறை இந்திய இளைஞர்களில் ஒரு பெரிய, மற்றும் வளர்ந்து வரும் செல்வாக்கு மிக்க பகுதியாகத் திகழ்கிறது. இது நாட்டின் முரண்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஜென் Z-க்கு இரண்டு முகங்கள் உள்ளன. ஒரு

பக்கம், IIT மற்றும் NIT பட்டதாரிகள், MBBS மருத்துவர்கள், மருந்தியல் மற்றும் செவிலியர் துறை வல்லுநர்கள் மற்றும் நிலை கல்வி பெற்ற பிற இளைஞர்கள் உள்ளனர்; இவர்கள் உலகளவில் போட்டியிடும் திறன் கொண்டவர்கள், டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்றவர்கள், மற்றும் புதுமை (innovation) சார்ந்த சிந்தனை கொண்டவர்கள்.

இன்னொரு பக்கம், உயர் நிலை கல்வி பெறாத, வேலையில்லாத அல்லது பகுதிநேர வேலை செய்யும் இளைஞர்களைக் கொண்டது. இவர்களில் பலர் கிராமப்புற அல்லது பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பின்னணியில் இருந்து வருகிறார்கள். இவர்களின் விரக்தி, போராட்டங்கள், சமூக அமைதியின்மை மற்றும் சில சமயங்களில், சீர்குலைக்கும் அல்லது குற்றச் செயல்களின் தாக்கங்களுக்கு எளிதில் ஆட்படும் தன்மை ஆகியவற்றில் வெளிப்படலாம்.

தற்போதுள்ள அரசியல் மற்றும் நிறுவன அமைப்பின் மீதான இவர்களின் பொறுமையின்மை, அரசியலமைப்பால் கட்டாயப் படுத்தப்பட்ட அடுத்த தேர்தல் ஐந்து-ஆண்டு சுழற்சிக்காகக் காத்திருப்பதை விட, தேர்தல்களுக்கு இடையில் விரைவான உடனடிப் புரட்சி, இன்ஸ்டன்ட் காஃபி அல்லது திடீர் ரசம் போல அரசியல் மாற்றத்திற்கான விருப்பமாகவும் மாறக்கூடும்.

**இந்தியாவின் பாரம்பரியம்**

இந்தியாவின் நிலைபெற்ற ஜனநாயக நடைமுறைகள் மஹாபாரதத்திலிருந்து (கண்ணபிரானுக்கும் அர்ஜுனனுக்கும் இடையிலான பாண்டவர் - கௌரவர் போரின் தார்மீக அடிப்படை விவாதம்) ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிலையை அடைவதிலிருந்தும், யாஜ்ஞவல்க்யர் - கார்கியின் உரையாடல்களிலிருந்தும், பௌத்த சபைகளின் விவாதங்கள் வரை தொடர்கின்றன. இதை பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு (1998) பெற்ற பேராசிரியர் அமர்த்யா சென், தமது புத்தகமான ''வாதாடும் இந்திய''னில் (Argumentative Indian, 2025) ஆவணப்படுத்தியுள்ளார். ''வாதம் ஜனநாயகத்தை வளப்படுத்துகிறது; கட்டளையால் அல்ல. இருப்பினும் பெரும்பாலும் வாதங்களும், எதிர் வாதங்களும் பொருளாதார முடிவுகளை எடுப்பதில் தாமதத்தையோ அல்லது காலவரையறையற்ற ஒத்திவைப்பையோ ஏற்படுத்துகின்றன'' என்கிறார்.

சமீபத்தில் போட்டித் தேர்வு முறைகேடுகள், வினாத்தாள் கசிவுகள், வேலையின்மை மற்றும் அமைப்பு ரீதியான தோல்விகள் எனக் கருதப்பட்டவை குறித்து இளைஞர்கள் வெளிப்படுத்திய கோபம், பாதுகாப்பான வேலை வாய்ப்புகள் கிடைப்பதை விட, கல்வி மீதான எதிர்பார்ப்புகள் மிக வேகமாக உயர்ந்துள்ள ஒரு தலைமுறையின் கவலைகளைப் பிரதிபலித்தது.

**(அடுத்த இதழில் முடியும்)**

**– டி.கே.ஜெயராமன்**

# புத்தக விமர்சனம்



**நூல்: வணக்கத்திற்குரிய வாஜ்பாய். ஆசிரியர்: ஜனனி ரமேஷ். பக்கம்: 252. விலை: ரூ.300/-. வெளியீடு: சத்யா என்டர்பிரைஸஸ், 134, முதல் தளம், சூளைமேடு ஹைரோடு, சூளைமேடு, சென்னை - 600094. தொலைபேசி: 044-45074203, +91 9080529054. E-mail:sathyaabooks@gmail.com**

அடல் பிகாரி வாஜ்பாய் 15 வயதில் பள்ளிப் பருவத்தில் இருந்தே ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்புகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது வாஜ்பாய் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பிரசாரக் ஆனார். எழுத்தாளர், கவிஞர், தலைசிறந்த பேச்சாளர் என பன்முகத்தன்மை கொண்டிருந்த வாஜ்பாய் சுதந்திரப் போராட்ட வீரராக, ஜனசங்கத்தின் தலைவராக, அப்பழுக்கற்ற அரசியல்வாதியாக, பா.ஜ.க. தலைவராக, நாடாளுமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, பின்னாளில் பாரதப் பிரதமர் என்னும் மிக உயர்ந்த பதவியையும் அலங்கரித்தார். 2015-ல் மத்திய அரசு அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கி கௌரவித்தது. 1974-ல் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி 'சிரிக்கும் புத்தர்' என்ற பெயரில் பொக்ரான் -1 அணு சக்தி சோதனையை வெற்றிகரமாக நடத்தி, உலக அரங்கில் நம் நாட்டின் வலிமையை நிலை நாட்டியது போல, 1998 மே 11-ல் வாஜ்பாய் 'ஆபரேஷன் சக்தி' என்ற பெயரில் பொக்ரான்-2 அணுசக்தி சோதனையை நடத்தி நம் நாட்டின் ஆற்றலை நிரூபித்தார். இத்தகைய பெருமை வாய்ந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் இளமைக் காலம் (1924-1960), வாஜ்பாயின் வளர்ச்சி - நேருவின் பாராட்டு (1957-1964), இந்திராவுடன் மோதல் (1971-1980), பாரதிய ஜனதா கட்சி உதயம் (1980), அத்வானி வருகையும் பாபர் மசூதி இடிப்பும் (1989 - 1996), மூன்றாண்டுகளில் மூன்று பிரதமர்கள் (1996 - 1999), மூன்றாவது முறை பிரதமரானார் வாஜ்பாய் (1999-2004), வாஜ்பாயின் கடைசிக் காலங்கள் ஆகிய எட்டு தலைப்புகளில் வாஜ்பாயின் வரலாறு இந்நூலில் விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 93-ஆண்டுகள் வாழ்ந்து நாட்டிற்கு சேவையாற்றி, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் நன்மதிப்பையும் பெற்ற வாஜ்பாயின் வரலாறு குறித்த இப்புத்தகம் அனைவரும் படித்து பயன்பெற வேண்டிய ஒன்று.

**– கரிகாலன்**